Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில் காணப்படும் இசை மற்றும் இசைக்கருவிகள்

21

வே.பரிமளா,
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு.

**ஆய்வு நோக்கம்:-**

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் போன்றே சீவகசிந்தாமணியிலும் இசை பற்றிய குறிப்புகள் பெருமளவில் காணப்படுகின்றன. சிலப்பதிகார இசை பற்றிய நூல்கள் வெளிவந்துள்ளன. சீவகசிந்தாமணியில் உள்ள இசை பற்றிய செய்திகளை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை ஆராய்ந்து தரப்பட்டுள்ளது.

**ஆய்வுச் சுருக்கம் :**

சீவகசிந்தாமணியின் நாமகள் இலம்பகத்தின் கதைச்சுருக்கம் மற்றும் அதில் காணப்படும் இசை, இசைக் கருவிகள் பற்றிய செய்திகள் எடுத்துக் காட்டுவதே இந்த ஆய்வின் கருவாகிறது.

**திறவுச் சொற்கள் :**

யாழ், குழல், முழவு, முரசு, தண்ணுமை, சங்கு, இசைக்கருவிகளின் பாகுபாடு.

**முன்னுரை :**

தொல்காப்பிய காலம் முதல் இன்றளவும் இசை பற்றிய பல செய்திகளை அறிந்து கொள்வதற்கு நூல்கள், இதழ்கள், செய்தித்தாள்கள், ஊடகங்கள் உறுதுணையாக இருந்து வருகின்றன. இவைகளில் காப்பியங்களிலும் இசை, நடனம் மற்றும் இசைக் கருவிகள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஐந்தும் ஐம்பெரும் காப்பியங்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றில் சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை இரண்டும் இரட்டைக் காப்பியங்களாகும். இக்காப்பியங்களில் சிலப்பதிகாரத்தில் இசை பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுவதை பல நூல்கள் கூறுகின்றன. இதனைப் போலவே சீவக சிந்தாமணியிலும் இசை, நடனம் மற்றும் இசைக் கருவிகள் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன. இக்கட்டுரை சீவகசிந்தாமணியின் நாமகளிலம்பகத்தில் காணப்படும் இசை மற்றும் இசைக் கருவிகள் பற்றி எடுத்துக்கூறும்

விதமாக 'சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில் காணப்படும் இசை மற்றும் இசைக்கருவிகள்' எனும் த லைப்பில் தரப்பட்டுள்ளது.

**சீவகசிந்தாமணி :**

சீவகன் எனும் அரசனின் பிறப்பு முதல் முக்தி வரை அவனின் கதையைக் கூறும் நூலாக விளங்குகிறது. சீவக சிந்தாமணி. இந்நூலின் ஆசிரியர் திருத்தக்கத் தேவர் ஆவார். இந்நூல் நாமகளிலம்பகம், கோவிந்தையார் இலம்பகம், காந்தர்வதத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம், பதுமையர் இலம்பகம், கனகமாலையார் இலம்பகம், கேமசரியார் இலம்பகம், விமலையார் இலம்பகம், சுரமஞ்சரி இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முக்தியிலம்பகம் என **13** இலம்பகத்தைக் கொண்டுள்ளது.

**நாமகள் இலம்பகம் :**

ஏமாங்கத நாட்டின் சிறந்த அரசனாக சச்சத்தன் என்பவன் அரசாண்டிருந்தான். இவனது நாட்டில் செல்வ செழிப்பு மிகுந்து காணப்பட்டது. அறம் ஓங்கி நின்றது. இசையும், நடனமும் நிகழ்ந்த வண்ணம் காணப்பட்டது. சச்சத்தன் விசயையை மணந்து தனது அரச பொறுப்பை தனது கட்டியக்காரனிடம் விட்டு விட்டு இல்லறத்தில் ஆழ்ந்து ஆட்சிப் பொறுப்பை மறக்க, கட்டியக்காரன் ஆட்சியினை நிரந்தரமாகத் தன்னிடத்தில் தக்க வைத்துக்கொள்ள திட்டமிட்டான்.

சச்சத்தன் தனக்குப் பிறக்கப்போகும் சந்ததி பொருட்டு ஆட்சிப் பொறுப்பினை அறிய, கட்டியக்காரனின் சூழ்ச்சியினை அறிந்தான். தன் மனைவி மற்றும் மகவைக் காக்க சிறந்த தச்சன் மூலம் பறக்கும் மயிற்பொறி ஒன்றை வடிவமைத்து அதில் தனது மனைவியை ஏற்றி அரண்மனையிலிருந்து அனுப்பி வைத்தான். விசயை இறங்கிய இடம் இடுகாடு ஆகும். அவ்விடத்தில் சீவகன் பிறந்தான். பெண் தெய்வம் சண்பகவல்லி என கூனி வடிவி;ல் விசயைக்கு உதவியது. கணவன், நாடு, மக்கள் என அனைத்தையும் இழந்த விசயை சீவகனை ஒளி பொருந்திய சிந்தாமணியாகப் போற்றினாள். பெண் தெய்வத்தின் அறிவுரைபடி கட்டியங்காரனிடம் இருந்து சீவகனைக் காப்பாற்ற அங்கேயே குழந்தையை கிடத்திச் சென்றாள்.

அவ்வேளையில் இறந்த தன் குழந்தையை புதைக்க வந்த கந்துக்கடன் என்ற வணிகன் அரச மோதிரத்தோடு கிடந்த சீவகனைக் கண்டு மனம் மகிழ்ந்து அவனை மகன் உயிர்பித்துக் கொண்டான் எனக் கூறித் தன் மனைவியான சுநந்தையிடம் கொடுத்தான்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கந்துக்கடன் மகன் உயிர்ப்பித்ததை அறிந்த அவனது நண்பனான கட்டியக்காரன் பொன்னும், வாழ்த்துரையும் அனுப்பி வைத்தான்.

இருவரும் சீவகனுக்கு கல்வி, இசை, வீரம் போன்ற பல கலைகளைக் கற்றுத் தந்தனர். அனைத்திலும் சீவகன் சிறந்தவனாக ஆனதோடு மட்டுமின்றி, ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினான். யாழ், குழல் போன்ற இசைக் கருவிகளையும் கற்றுத் தேர்ந்தான். இவனது ஆசிரியராக விளங்கிய அச்சணந்தி என்பவர் அவன் ஒரு இளவரசன் எனவும், சச்சத்தனின் மகன் என்ற சீவகனின் வரலாற்றினைக் கூறி முக்திப்பேற்றினை அடைந்தார்.

**நாமகள் இலம்பகத்தில் இசையும், இசைக்கருவிகளும் :**

சீவகசிந்தாமணியின் நாமகள் இலம்பகத்தில் ஏமாங்கத நாட்டில் நாள்தோறும் கூத்தன் ஒலியும் கைகொட்டிக் கேட்போர் நெஞ்சைப் பருகுமாறு பாடும் பாடலின் ஒலியும், பெரிய முழவின் ஒலியும், பிறகருவிகளோடு அழகும் சுவையும் பொருந்திய நரம்புடைய யாழின் ஒலியும் குறைவு இல்லாமல் கேட்டுக் கொண்டே இருக்குமாம்.

ஆடலின்ன ரவ்வமு மங்கை கொட்டி நெஞ்சுணப்
பாடலின்ன ரவமும் பணைமுழவ்வ ரவமும்
கூடுகோலத் தீஞ்சுவைக் கோல யாழரவமும்
வாடலில்ல வோசையால் வைகனாளும் வைகின்றே (பக் -84)

இதில் கூத்து, பாட்டு, முழவு, யாழ் போன்றவற்றின் இசையினைக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடலானது நெஞ்சை உருக்குவதாக இருக்கும் எனவும், யாழானது அழகும், இனிய ஓசையை உண்டாக்குகிற நரம்புடைய யாழ் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசயை தன் மயிற்பொறி ஊர்தியை செலுத்துமிடத்து பாட்டுப் போலே மெல்ல மெல்ல மேலும் மேலும் செலுத்தினாள் என்பதை,

ஆடியன் மாமயிலூர்தியை யவ்வழி
மாடமுங் காவுமடுத்தொர்சின்னாள் செலப்
பாடலின் மேன்மேற் பயப்பயத் தான்றுரநந்
தோடமுறுக்கியுணர்த்தவுணர்ந்தாள் (பக் -125)

கூறுமிடத்து பாடலானது தனக்கென்று உள்ள நியதிகளைக் கொண்டு அமைந்துள்ளது போல (மண்டிலம், வேகம்) ஊர்தியை இயக்கினாள் என பாடலின் சிறப்பினைக் காட்டுகிறது.

மற்றுமொரு இடத்தில் இசையினைக் கேட்டு பயன் தரும் நாடகத்தினை கண்டு

நுகர வேண்டும் என நாடக இசைச் சிறப்பினைக் கூறுகிறது.

பண்கனியப்பரு கிப்பய னாடகம்
கண்கனி யக்கவர்ந் துண்டுசின் னாளசெல
விண்கனி யக்கவின் வித்திய வேற்கணி
மண்களிப் பான்வள ரத்தளர் கின்றாள் (பக்-121, பா- 230)

ஏமாங்கத நாட்டின் நகர்வளத்தினைப் பற்றிக் கூறும்போது யாழொலி, பாட்டு, குழல், முழவொலி ஆகியவை ஒருசேர ஒலிக்கின்றதைக் காட்டுகிறது.

அஞ்சிலம் பொலியோடல்குற் கலையொலி யனந்த முன்கைப்
பஞ்சிமெல் விரலிற் பாணி பண்ணொலி பவழச் செவ்வாய்
அஞ்சிநேர்ந்து துயர்க்குந்தேன் சோர்க்குழலொலி முழவினோசை
துஞ்சலி லோசை தம்மாற்றுறக்கமு நிகர்க்லாதே. (பக் - 64)

இதே போல குழல், முழவு, முரசு, சங்கு, யாழ், தண்ணுமை, சிலம்பு போன்ற இசைக் கருவிகள் பற்றியக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

முழவணி முதுநகர் முரசொடு வளைவிம
விளவணி மகளிர் தம் விரைகமழிளமுலை
இளையணி யொலியிள வெயில்செய விடுபுகை
முழையென மறையின பொலிவின தொருபால் (பக் -68)

எஃககென விளங்கும் வாட்க ணெரிகடலமிர்த மன்னா
ளஃகிய மதுகை தன்னா லாய்மையி லூறு மங்கன்
வெஃகியு புகழினான்றன் வென்றிவெம் முரச மார்ப்ப
வெஃகெறி பிணையின் மாழ்கியிறுகிய இறுகி மெய்ம் மறந்து
சோர்ந்தாள்
(பக்-155)

செந்தீக்கருந்துளைய தீங்குழல்யாழ் தேந்தே மென்று
மணிமுழவமும் தந்தாங்கிளையார் மெல்விரல் கடீண்டத்தாந்தா
மென்றிரங்குந் தண்ணுமைகளும் அந்தீங்;கிளவியாரைஞ்ஞாற்று
வரவை துறைப் பேயாடலரம் பையன்னார் எந்தாய் வெறு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நிலத்துய்ச்

சேர்தியோ வென்றனைந் திரங்கிப்பள்ளிப்படுத்தார்களே (பக் - 151)

இசைக்கருவிகளின் நான்கு வகைப் பாகுபாட்டினை சீவக சிந்தாமணிக் காட்டுகிறது.

சுரிமுக வலம்புரி துளைத்து தூரியம்
விரிமுக விசும்புற வாய்விட்டார்த்தன
எரிமுக நித்தில் மேந்திச் சேந்தபோற்
கரிமுக முலையினார் காய்பொன் சிந்தினார் .(பக் - 169 - பா-329)

குறுகிய முகமுடைய வலம்புரிகள் முழங்கின. அதில் நால்வகையான இசைக்கருவிகள், தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக் கருவிகள், இசைத்தனர்.

சீவகனுக்கு கலையினை கற்றுக் கொடுப்பதை கலையினை மணமுடிக்க விழைந்தனர் என்கிறது சீவக சிந்தாமணி.

முழவென திரண்ட திண்டோண் முரிவெஞ்சிலையினானும்
அழலெனக் கனலும் வாட்கணங்வளைத் தோளினாலும்
மழலையாழ் மருட்டுந் தீஞ்சொன் மதனையை மயிலஞ்சாய்ந்
குழைமுக ஞானமென்னுங் குமரியைங் புணர்க்கலுற்றார்.

(பக்- 189, பா-368)

விசயை யாழ் வாசிக்கும் தன் விரல்களாலே விசைப் பொறியை திருகினாள் என்ற குறிப்பு காணப்படுகிறது.

பண்டவழ் விரலிற் பாவை பொறிவலத் திரிபப்பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப்பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடந் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித் திருக்குமன்றே

(பக் -125, பா- 239)

சீவக சிந்தாமணியின் நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளம், கோவில் சிறப்பு, சச்சந்தன் வரலாறு, நகர்வளம், சீவகன் பிறப்பு போன்றவற்றினைப் பற்றிக் குறிப்பிடுகையில் முத்தமிழ் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் திருத்தக்கத்தேவர்.

**முடிவுரை :**

ஐம்பெரும்காப்பியமான சிலப்பதிகாரத்தினைப் போலவே சீவக சிந்தாமணியிலும் இசை மற்றும் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. நாமகள் இலம்பகத்தில் சீவகனைப் பற்றிக் குறிப்பிடுகையில் அக்காலக்கட்டத்தில் இருந்த

இசை, நாடகம் மற்றும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது.

**சான்றாதாரங்கள் :**

1. தமிழர் இசை – டாக்டர்.ஏ.என்.பெருமாள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 1984.

2. சீவகசிந்தாமணி மூலமும், நச்சினார்கினியர் உரையும் – மகாமகோபாத்தியாய தாட்சிணாத்திய கலாநிதி டாக்டர்.வே.சாமிநாதையய்ர் - தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் - 1986.